தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 16, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 செப்டம்பர் 2, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை."

ஒருபொழுதும் சோர்வு இல்லாத ஊக்கம் உடையவரிடத்தில், செல்வமானது, தானே அவர் இருக்கும் இடம் தேடி வழி கேட்டு வந்து சேரும்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

புதிய வகுப்பறைகள்

***51651—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், செங்கங்காட்டிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியத்தில் செயல்படும் செங்கங்காடு அரசு உயர்நிலைப் பள்ளி 2010-2011 ஆம் கல்வி ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளியாகும். இப்பள்ளிக்குப் புதியதாக வகுப்பறைகள் கட்டிட ரூ.58,12,000/-க்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, முதல் கட்டமாக ரூ.29,06,000/- அனைவருக்கும் இடைநிற்றல் கல்வித் திட்டத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், பொதுப் பணித் துறையின் மூலமாக 14 அறைகள் கொண்ட கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், செங்கங்காடு அரசு உயர்நிலைப் பள்ளியானது, 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் தரம் உயர்த்தப்பட்ட பள்ளியாகும். இந்தப் பள்ளியில் 125 மாணவ, மாணவியர் படிக்கின்றார்கள். இந்தப் பகுதி முழுவதும் மீனவ மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். அப்பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு அந்தப் பகுதி பொது மக்கள் ஒரு ஏக்கர் நிலம் வாங்கி, பத்திரப் பதிவு செய்து கொடுத்திருக்கிறார்கள். 2015 ஆம் கல்வி ஆண்டில் முத்துப்பேட்டை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய 10 உயர்நிலைப் பள்ளிகளில், செங்கங்காடு அரசு உயர்நிலைப் பள்ளி 100 சதவீத தேர்ச்சி பெறும் பள்ளியாகும். அந்தப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அக்கட்டடப் பணிகள் தொடங்காத காரணத்தால், மாணவச் செல்வங்கள் வெளியில் அமர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட செங்கங்காடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.58,12,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூ.29,06,000/-க்கு தற்போது பணி ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. மீதம் இருக்கும் பணிக்கும் நடப்பு ஆண்டில் நிதி வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பணியினையும் உடனடியாகத் தொடங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளிக்குத் தயார் நிலையில் இருக்கிறதென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டி நகரத்திலிருக்கக்கூடிய அரசு மேல்நிலைப் பள்ளி மிகப் பெரிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்த ஆண்டு அப்பள்ளி தொடங்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவடைகிறது. அந்தப் பள்ளி, இன்றைக்குப் பழுதடைந்த நிலையில் உள்ளது. ஆகவே, 100 ஆண்டுகளை நிறைவு செய்யும் அந்தப் பள்ளிக்குச் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பள்ளிக் கட்டடத்தில் உள்ள பழுதினை நீக்கி, சரிசெய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கித் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்திலிருக்கக்கூடிய அந்த மேல்நிலைப் பள்ளியானது தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடையும் காலக்கட்டத்திலிருக்கிறது. அந்தப் பள்ளிக் கட்டடப் பழுதினை நீக்கி, சரி செய்யும் பணியினைச் செய்து*

கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ளார். அப்பள்ளி தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, அந்தப் பள்ளியைத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, அப்பள்ளி பழுதடைந்திருந்தால், அப்பழுதை நீக்கி அதற்குத் தேவையான மராமத்துப் பணி அனைத்தையும் செய்து கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

துணை மின் நிலையம்

***57719 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகரில் புதிய தொழிற்பேட்டைக்காக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகரில் 110/33/11 கே.வி. துணை மின் நிலையம் இயங்கி வருகின்றது. இத்துணை மின் நிலையத்தில் 110/33 கே.வி.-யில் 2x16 M.V.A. *மின் திறன்கொண்ட மின்மாற்றிகளும், 110/11 கே.வி.-யில் 2x16* M.V.A. *திறன் கொண்ட மின்மாற்றிகளும் இயங்கி வருகின்றன. இந்த மின் மாற்றிகளின் உச்ச மின் பளு முறையே 24.96* M.V.A. *மற்றும் 18.7* M.V.A. *ஆகும். புதியதாக அமையவுள்ள தொழிற்பேட்டையின்*